செய்தி வெளியீடு எண்:534 நாள்: 14.08.2017

## செய்தி வெளியீடு

## இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சரின் 854 பதக்கங்கள் வழங்கும் விழா

விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

15.08.2017 அன்று காலை 11.00 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வீரதீரச் செயல், தகைசால் பணி, மெச்சத்தக்கப் பணி, சீர்திருத்தப் பணி, சிறப்புப் பணி, சிறந்த புலனாய்வு, விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தொழில் நுட்ப சிறப்புப் பணி மற்றும் பொது சேவைக்கான சீர்மிகு பணி ஆகிய பதக்கங்களை சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு வழங்குகிறார்.

பதக்கம் பெறுவர்களில் 6 அலுவலர்கள் தலா இரண்டு பதக்கங்கள் பெறுகிறார்கள். இப்பதக்கங்களை காவல் துறை மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறையைச் சேர்ந்த 635 அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை சேர்ந்த 103 அலுவலர்களுக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 63 அலுவலர்களுக்கும் மற்றும் குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 53 அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்.

இப்பதக்கங்களில் இந்திய குடியரசுத் தலைவரின் 265 பதக்கங்களும், தமிழக முதலமைச்சரின் 589 பதக்கங்களும் அடங்கும்.

மத்திய அரசின் 265 பதக்கங்களில் இரு காவல்துறை அலுவலர்கள் வீரதீரச் செயலுக்காகவும், 21 காவல்துறை அலுவலர்கள் தகைசால் பணிக்காவும், 145 காவல்துறை அலுவலர்கள் மெச்சத்தக்கப் பணிக்காகவும், 10 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர்கள் வீரதீரச்செயலுக்காகவும், 36 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர்கள் மெச்சத்தக்கப் பணிக்காகவும், 3 சிறைத்துறை

அலுவலர்கள் சீர்திருத்தப் பணிக்கான தகைசால் பணிப்பதக்கங்களும், 21 சிறைத்துறை அலுவலர்கள் சீர்திருத்தப் பணிக்கான மெச்சத்தக்கப் பதக்கங்கள் மற்றும் 27 குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்காவல்படை அலுவலர்கள் மெச்சத்தக்கப் பணிகளுக்கான பதக்கங்களும் பெறுகின்றனர்.

மாநில அரசின் 589 பதக்கங்களில், 3 காவல்துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் வீரத்தீரச் செயலுக்கான பதக்கங்களும், 12 காவல்துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் சிறந்த பொது சேவைக்கான சிறப்புப் பணிபதக்கங்களும், 389 காவல்துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் சிறப்புப் பணிக்கான பதக்கங்களும், 32 காவல்துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணி பதக்கங்களும், 8 காவல் அலுவலர்கள் தமிழக முதல்வரின் விரல்ரேகை அறிவியல் சீர்மிகு பணிப்பதக்கங்களும், 23 காவல் அலுவலர்கள் தமிழக முதல்வரின் காவல் தொழில்நுட்ப சிறப்பு பணிப்பதக்கமும், 3 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் வீரதீரச் செயலுக்கான பதக்கங்களும், 17 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் மிகச்சிறந்த பணிக்கான பதக்கங்களும், 37 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் சிறப்புப் பணிக்கான பதக்கங்களும், 39 சிறைத்துறை அலுவலர்கள் தமிழக முதல்வரின் சிறைத்துறை நற்பணிப் பதக்கங்கள் மற்றும் 26 குடிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க் காவல் படை அலுவலர்கள் தமிழக முதல்வரின் சிறப்பு பணிக்கான பதக்கங்களும் பெறுகின்றனர்.

விழா சிறப்பாக நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுளையும் தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர் தே.க. ராஜேந்திரன் அவர்கள், ஆயுதப்படை கூடுதல் காவல் துறை இயக்குநர் முகமது ஷகில் அக்தர் அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் அ.கா. விஸ்வநாதன் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**